★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 21 முஹற 20 இதழ் 267

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 7—11—82

இறக்குமதிசெய்யப்பட்ட
திறமான
ஊத்தைச்சோடா [SODA ASH]
மொத்தமாகவும் [50 Kgs Bags]
சில்லறைக்கும் விற்பனைக்கு உண்டு.

கதிர்ஹாட்வேயர்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23130
[5078]

பஸ் - ஜீப் விபத்து

### இரு ராணுவ வீரர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுமாலை நடந்த பஸ் – ஜீப் விபத்தில் இரு இராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.

யாழ். பிரதான வீதியில் நடந்த இவ்விபத்தின் போது பஸ் பிரயாணிகளுக்கு காய மெதுவும் ஏற்படவில்லை.

காயமடைந்த இரு இராணுவவீரர்களும் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். [க]

## ★ பாராளுமன்ற பதவிக்காலம் நீடிப்பு:

# சிறிமா தலைமையில் பதினொரு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

## தேர்தலை உரியகாலத்தில் நடத்த ஜனாதிபதியிடம் கோருவர்

- இ. கந்தசாமி -

**பாராளுமன்றப் பதவிக்காலத்தை நீடிப்பதை ஆட்சேபித்தும் பொதுத் தேர்தலை உரியகாலத்தில் நடத்துமாறு கோரியும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கடிதமொன்றை அனுப்புவதென பதினொரு எதிர்க்கட்சிகள் கூடித்தீர்மானித்துள்ளன.**

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் சுதந்திரக் கட்சி தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் மேற் கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணியும், மக்கள் விடுதலை முன்னணியும் கலந்து கொள்ளவில்லை

இக்கூட்டத்தில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, திரு. ரி. பி. இலங்கரத்தின (சுதந்திரகட்சி) திரு. பீட்டர் கெனமன், திரு. கே. பி. சில்வா (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி), திரு. தினேஸ் குண வர்த்தன மக்கள் ஐக்கிய முன்னணி திரு. நியதிபாலா திரு. டயஸ் லங்கா ஜாதிக பெரமுன, ஜனப் அசிஸ் (ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்) திரு. ஜெய சூரியா, திரு. ஜெயதிலாகா (நவலங்கா சமசமாஜக்கட்சி). திரு. குமார் பொன்னம்பலம் (அகில இலங்கை தமிழ்காங்கிரஸ்), திரு. அனில்முனசிங்கா. திரு. வனிக துங்கா (ஸ்ரீலங்கா

[8ம் பக்கம் பார்க்க]

## "உயிரை மேல்நிலைக்கு கொண்டுவரும் கல்வியே சிறந்தது"

### யாழ். இந்து பரிசளிப்புவிழாவில் பேராசிரியர் கனகசுந்தரம்

[பா. அனந்தகிருஷ்ணன்]

''உத்தியோகங்கள் பெற்று உடம்பை வளர்க்கும் வகையி லேயே இன்று கல்விப்போதனை அமைந்துள்ளது. இத்தகைய கல்வியினால் நிரந்தரமற்ற உடல் மட்டுமே வளர்ச்சி பெறுகின்றது, இத்தகைய வளர்ச்சி தவறானதென்று கொள்ளமுடியாது. ஆனால் உடலில் இருக்கும் உயிரை மேல்நிலைக்குக் கொண்டுவரும் கல்வியே உயர்ந்த தொனரு கும்''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தலைவர் பேராசிரியர் இ. கனகசுந்தரம்

[8-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு - யாழ். ரயிலில் இளைஞருக்கு கத்திக்குத்து!

[கொழும்பு]

கொழும்பு மெயில் வண்டியில் முகமவில் மீண்டும் நடந்த கொள்ளையின்போது ஒரு இளைஞர் கத்திகுத்திற்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் வந்த மெயில் வண்டியின் உறங்கலிருக்கை பெட்டியில் இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

கத்திமுனையில் அப்பெட்டிக்குள் ஏறியவர்களில்ஒருவன்,ஒரு இளம்பெண்ணின் சங்கிலியை அறுத்ததாகவும் அச்சமயம் அப் பெண்ணின் சகோதரர் தடுக்க முயற்சித்த போது கத்திக்குத் திற்கு இலக்கானதாகவும் கூறப்படுகிறது.

[8-ம் பக்கம் பார்க்க]

### ★ குமார் சமர்ப்பித்த பிரேரணை:

## அரசு வெற்றிபெற்றால் எதிர்க்கட்சி எம். பிக்கள் ராஜினமாச் செய்யவேண்டும்!

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெற்று பொதுத்தேர்தலை நடத்தாவிடில் 1983 ஆகஸ்ட்டில் தற்போதுள்ளசகலஎதிர்க்கட்சிஎம்பி.க்களும்பதவிகளைராஜினமா செய்வதுடன் கட்சி செயலாளர்கள் பொதுத் தேர்தல் நடக்கும் வரை தேர்தல் ஆணையாளருக்கு புதிய பெயர் பட்டியலை சமர்ப்பிக்கக்கூடாது.

பொதுத்தேர்தல் பின் போடுவதை எதிர்க்கும் இயக்கத்தின் பிரசார அமைப்பு குழுக்களின் கூட்டம், சுதந்திரக்கட்சி தலைமை காரியாலயத்தில் நேற்று காலை நடைபெற்ற போது தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற் கண்ட பிரேரணையை சமர்ப்பித்தார்.

சுதந்திர கட்சி உப – தலைவர் திரு. ரி. பி, இலங்கரத்தின தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இப்பிரேரணை பற்றி ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சுதந்திரக்கட்சி,

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணியினருக்கு அழைப்புக்கிடைக்கவில்லை!

### - யாழ் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

சுதந்திரக்கட்சி தலைமை காரியாலயத்தில் நடந்துள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டத்திற்கு கூட்டணியினருக்கு அழைப்பு கிடைக்கவில்லை என்று யாழ்ப்பாண எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இக்கூட்டம் பற்றி எவ்வித அறிவித்தலோ, அழைப்போ தமக்கு கிடைக்கவில்லை யென்றும் அவர் கூறினர்.

மற்றும் கூட்டணி எம். பிக் களுக்கும் இக்கூட்டத்திற்கான

(8-ம் பக்கம் பார்க்க)

### விதை வெங்காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விற்பனை இலாகாவில் போதியளவு விதைவெங்காயம் விற்பனைக்கு இருப்பதாக விற்பனை திணைக்கள பிரதி ஆணையாளர் திரு. கணேசதாசன் தெரிவித்துள்ளார். [க]



அன்பின் அழைப்பு

பாவக்கடினம், பிசாசின் ஏமாற்றம், நோய்களின் துயரம், என்பனவற்றைத் தீர்க்க, ஒளிபொழியும் அமுத வாசகங்களைக் கேட்டு வாழ்வடைய வாருங்கள்.

பேச்சாளர்: சுவிஷேசர் N ஜீவானந்தம் (இந்தியா)

காலம்: நவம்பர் 8 முதல் 11 வரை

நேரம்: மாலை 5-30 வரை

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்.

5080

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆ. முத்துலிங்கம், இணுவில் றோட், சுதுமலை வடக்கு மானிப்பாய். 5044

---

ஆங்கிலம், தமிழ், சிங்கள அச்செழுத்துக்கள் 120 கேஸ்கள், அச்சடிக்கும், வெட்டும் இயந்திரங்கள், Hand-Press Perfor tor, தமிழ் ஆங்கில போஸ்டர் எழுத்துக்கள், கலீஸ்கள், மெஷின் நம்பரிங், இன்னும் அச்சகத்திற்குத் தேவையான உபகரணங்கள் உண்டு. விபரங்கட்கு: 320 அல்லது 392/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5067

---

முதல் சொந்தக்காரரின் ஒரே பாவிப்பிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். இல. 609, நாவலர் றோட், யாழ்ப்பாணம். 5055

---

க. பொ. த. பரீட்சைக்கான ஆங்கில தட்டச்சு வினாவிடை வெளிவந்துவிட்டது. விலை ரூபா 12-00 கிடைக்குமிடங்கள்; சாரதாபுத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். காட்லி இன்ஸ்ரியூட் அனகா பிரதர்ஸ்-பருத்தித்துறை. 5049

---

உடுப்பிட்டி சந்திக்கு சமீபமாக, பெண்கள் கல்லூரிக்கு மேற்குப் பக்கத்தில் 4 பரப்பு நிலம் விற்பனைக்குஇருக்கிறது. தொடர்பு: சி சுப்பிரமணியம் முதலாம் ஒழுங்கை, ஐயனார் வீதி, பருத்தித்துறை. 5045

---

26 ஸ்ரீ 5000 தொடர்பிலக்க Leyland L/D வான்விற்பனைக்குண்டு மற்றும் Delica வான்களும், ELF டிக்குகளும் உண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி. 5054

---

அரியாலை யூதா கோவிலுக்கு அருகாமையில நன்னீர் வசதியுடன் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்,) விபரங்களுக்கு: க. கதிர்காமநாதன் (C.O), 29, பொன்னம்பலம் வீதி, அரியாலை அல்லது மக்மில்லன் புத்தகசாலை, 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5058

---

யாழ். சுண்டிக்குளி விதானையார் ஒழுங்கையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு ரூ 1,40,000/- விண்ணப்பிக்க. விளம்பர இல: 5063, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 5063

---

கீழ் கூறப்பட்ட காணிகள் உடன் விற்பனைக்குண்டு, வடக்கு மிருசுவில் வீதியில் வீடு கட்ட உகந்த காணி நாலு பரப்பு, வேளாவெள்ளம் பதினறு பரப்பு ஐம்பது பனைகளுடன், நுனிவில் வயல் ஒன்பது பரப்பு உசன் வீதிக்கு அண்மையில், விலைவிபரத்துடன்கடிதம் மூலம் தொடர்பு கொள்க. K. P. D. யோகரட்ணம், 96, ஆடியபாத வீதி, கேணியடி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. 5065

---

யாழ்ப்பாணம் ஈச்சமொட்டையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எட்மன்ட், இலக்கம் 15, 5ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 5074

## விற்பனைக்கு

166 மானிப்பாய் வீதியிலுள்ள இரு கடைகளில் ஒரு கடை வசதிகளுடன் விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி S. P. கந்தசாமி, (ஈழநாட்டுக்கு எதிரில்), 166, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 5060

---

புத்தம் புதியபெட்டிஉடைக்கப்படாத நஷனல் வீடியோ-NV-300 EN, நஷனல்வீடியோ ஹெட்ஸ்-VTR, JVC வீடியோ கமரா-மொடல் GX-88 E என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S. நமசிவாயம், சதாபெல்ஸ், அல்வாய்தெற்கு-அல்வாய். 5057

---

யாழ். மாநகரசபை எல்லைக்குள் புதிய சோனக தெருவில் 35பரப்புகாணி முழுதாகவோ, துண்டுகளாகவோ விற்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பரஇல: 5077, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5077

---

72/1, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியில் சில்லறைக் கடைக்கு ஏற்ற தளபாடங்களும், இடத்தை விட வேண்டியிருப்பதால், வியாபாரஉரிமையும் விரும்பினுல் கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில். 5035

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன் ஏயர்கொண்டிசனிங் Hotel management, Spoken English, French சனி, ஞாயிறு காலை, மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பம் 07-11-82 விபரங்களிற்கு நேரில் வரவும். The School of Computer Studies 52/1 கனகரத்தினம் பில்டிங் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல் மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5020

---

விசேட எலக்றிக்கல் வயரிங் பயிற்சி 10-11-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5025

---

3 மாத பொது விவசாயப் பயிற்சி 17—25 வயதுடைய இருபாலாரும் 20-11-82 முன் விண்ணப்பிக்கலாம். சிறு ஊதியமும், விடுதி வசதியும் வழங்கப்படும். அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாயநிறுவனம், மருதனமடம், சுன்னாகம். 5062

---

P. M G - சான்றிதழ் Ship Radio Officers ஜூன் 1983 ஸ்பெசல் சான்றிதழ் பரீட்சை நவம்பர் 1983 ஜெனரல் பரீட்சைக்குமான பயிற்சிவகுப்புகள் 20-11-1982 இல் ஆரம்பம். விபரங்கட்கு: க. இராசரத்தினம். இம்பீரியல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கே. கே எஸ். வீதி, தெல்லிப்பளை. 5075

## வாடகைக்கு

ஸ்டான்லி வீதியில் நல்ல நிலையிலுள்ள இடம் வாடகைக்கு உண்டு கம்பியூட்டர் விற்பன்னர்களுக்குப்பொருத்தமான இடம். விபரங்கட்கு; தனராசா, C/o கிருஷ்ண பவனம், சுதுமலைவடக்கு, சுதுமலை, (சனி-ஞாயிறு மட்டும்) 5030

---

மானிப்பாய் கோவில்பற்று
ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

## கேள்வி மூலம் விற்பனை

மேற்படி சங்கத்தில் பின் வரும் பொருட்கள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு

1. வெற்றுச்சாக்கு - 2500
2. பாவித்த லொறி ரயர்
3. பாவித்த பற்றி (லொறி)
4. பழைய றிம் (லொறி)
5. நெசவு நூல் (40 எஸ், 50 எஸ், 60 எஸ்)
6. பாவித்த லொறி உதிரிப் பாகம்.

சாக்கு விற்பனைக்கான கேள்விப் பத்திரத்தை மட்டும் ரூபா 200/- முற்பணம் செலுத்தி கேள்விப் பத்திரத்தை வாங்கி பூரணப்படுத்தி ஒப்படைக்கவேண்டும். மற்றைய பொருட்கள் விற்பனையைப் பொறுத்தளவில் பொருட்களை நேரில் பார்வையிட்டு கேள்விப்பத்திரம் தயாரித்து பதிவுத்தபாலில் 10-11-82ம் திகதி 12-00மணிக்குள் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், மானிப்பாய் கோவில் பற்று ப. நோ கூ. சங்கம், மானிப்பாய் என்றமுகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

பொதுமுகாமையாளர்.
5076

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# தமிழர் கூட்டணி மீது சிறில் மத்யூ கடும் தாக்கு

(கொழும்பு)

''பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூட்டணியினர் கூறிக்கொண்டு பயங்கிரவாதியான குட்டிமணியை எம். பி. யாக நியமித்துள்ளனர் சாவகச்சேரியில் பயங்கரச்சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.''

இவ்வாறு கைத்தொழில், விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில மத்தியூ அரசியலமைப்புக்கான நான்காவது திருத்த சட்டமூல விவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''கூட்டணியினர் பயங்கரவாதத்தை எதிர்ப்பதாக ஏன் தமது பகுதிகளிலும், கிராமங்களிலும் சென்று சொல்லக் கூடாது? பயங்கரவாதிகளைக் காட்டிக் கொடுக்குமாறும் அவர்களுக்கு எதிராக சாட்சி சொல்லுமாறும் கூட்டணியினர் ஏன் மக்களை அழைக்கக் கூடாது? இவ்வாறு செய்தால் அவர்கள் மறுநாளே சுட்டுக் கொலை செய்யப்படுவார்கள். அவர்கள் சபையில் மட்டும் பயங்கரவாதத்தை எதிர்ப்ப

[5ம் பக்கம் பார்க்க]

## குட்டிமணி நியமனம் வாழ்த்தும் நன்றியும்

(புலோலி)

குட்டிமணியை வட்டுக்கோட்டைப் பாராளுமன்றப் பிரதிநிதியாக நியமித்ததைப் பாராட்டி வல்வை வடக்குக் கிராமோதய சபை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்திற்கு நன்றிதெரிவித்துள்ளது.

இக்கிராமோதய சபைக்கூட்டம் சபைத்தலைவர் திரு. கே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றபோதே தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைப்பீடத்திற்கு நன்றி தெரிவிப்பதென்றும் குட்டிமணிக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

---

**விற்பனையாகின்றன!**

இறக்குமதி செய்யப்பட்ட
ஒட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக்கதவுகளும்
வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக்கொள்ளலாம்

**இப்ராகிம் ஜபார்ஜி,**
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்
போன்: 22409

---

## மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபெற விரும்புவோர் பாஸ்போட், போட்டோஸ்ரட் பிரதி. போட்டோ, அனுபவச் சான்றிதழ், நற்சான்றிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளுடன் ஐம்பது ரூபாவுடன் பதிவுசெய்துகொள்ளலாம். பிற விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்.

சு. ஸ்ரீபாஸ்கரன் (தலைவர்)
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்.
மல்லாகம்.
Labour Licence No. 292. (5043)

---

## தொழிற் பயிற்சி

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடாத்தும்
வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு
பின்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள்
கோரபபடுகின்றன.

1. மின் இணைப்பு 6 மாதம்
2. வெல்டிங் 6 மாதம்
3. இயந்திர இயல் 6 மாதம்
4. தட்டெழுத்து (ஆங்கிலம) மாதம்
5. சுருக்கெழுத்து (ஆங்கிலம) 1 வருடம்
6. பிரயோக இலத்திரன் இயல் 1 வருடம்

தொழிலாளரதும், மாணவரதும் நலன் கருதி போதனை முறையாகவும், செய்கைமுறையாகவும் மாலை நேர வகுப்புகள் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்படும்.

மாதக்கட்டணம் ரூபா 25/-

உடன் தொடர்பு கொள்ளவும்.
இயக்குனர்.
வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையம்,
சித்தன்கேணி. (5068)

---

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்
வீடு 2பரப்புக் காணியுடன்
றக்கா வீதி.
4½ பரப்புக் காணி
கொய்யாத்தோட்
திருநெல்வேலி
2 பரப்புக் காணி
கைதடி
50 பரப்புக் காணி
நவாலி
4 பரப்புக் காணி
புளியங்குளம்
37 ஏக்கர் தோட்டம்
(வீடு - கிணறு உட்பட)
கண்டி வீதி

மேலதிக விபரஙகளுக்கு:
தோட்டக்காணிப்பிரிவு,
த பிறுன்ஸ் கம்பனி
லிமிற்றட்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
021 — 23680

---

கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

'இசு உசு' லொறி உரு
அமைப்பதற்கான

## கேள்வி விளம்பரம்

சங்கத்திலுள்ள 'இசு உசு' லொறி ஒன்றுக்கு உரு அமைப்பதற்கும், ரிங்கர் வேலை செய்வதற்குமான கேள்விகள் கோரப்படுகின்றன. நிபந்தனைகள் பற்றிய பத்திரங்கள் மீள அளிக்கப்படும் வைப்புப் பணம் ரூபா 50/- கட்டி சங்கத்தில் வேலைநாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 15-11-82.

சு. யோசேப்
தலைவர்

கரைதுறைப்பற்று ப.நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு. 3-11-1982. 5052

---

யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்கா இராணுவ பலத்தை அதிகரித்தால் சோவியத்யூனியனும் அதிகரிக்கும்!

## சோவியத் தலைவர் ஒருவர் விடுத்துள்ள எச்சரிக்கை

மாஸ்கோ, நவ. 6

"அமெரிக்கா தனது இராணுவ பலத்தை அதிகரிக்க முயற்சித்தால் சோவியத்யூனியனும் இராணுவபலத்தை அதிகரிக்க வேண்டியேற்படும்."

இவ்வாறு சோவியத்யூனியனின் சிரேஷ்ட தலைவர்களிலொருவரான திரு. விக்டர் கிரேஷின் பொதுக்கூட்ட மொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எந்த ஒரு நாடும் இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கு சோவியத்யூனியன் விட்டுக் கொடுக்கமாட்டாது.

அமெரிக்கா ஐரோப்பாக் கண்டத்தில் நூற்றுக்குமதிகமான ஏவுகணைகளை வைத்துக் கொண்டு உலகநாடுகளை அச்சுறுத்திவருகிறது.

சோவியத்யூனியன் தனது நட்புநாடுகளின்பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்து வருகிறது என்றார்.

அமெரிக்காவின் அண்மைக் காலப்போக்கினையும். ஜனாதிபதி றீகனின் நடவடிக்கைகளையும் சோவியத் ஜனாதிபதி திரு. பிரெஷ்னேவ்வும், கிரெம்ளின் தலைவர்களும் கண்டித்து வருவது தெரிந்ததே (வெ)

## விண்வெளியில் ஆயுதப்போட்டி, இந்தியா கவலை

புதுடில்லி, நவ 6

விண்வெளியில் பெருகிவரும் ஆயுதப் போட்டியின் அபிவிருத்தி குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

மனித குலத்தின் நன்மைக்காக அமைதி மண்டலமாக விண்வெளியைப் பயன்படுத்த வேண்டுமென்றும் அது உலக நாடுகளைக் கேட்டுள்ளது.

## பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை

சென்னை, நவ. 6

மதுரையில் சிவில் உரிமை இயக்கம் நடத்திய ஊர்வலத்தின்போது தடியடிப்பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான விசாரணை தற்போது நடைபெற்று வருவதாகவும், அது முடிந்த பின்னர் இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## இந்திய--பாக் உறவைவலுப்படுத்த வாய்ப்புக்கள்

ஜகர்த்தா நவ. 6

இந்தியாவுடன் பாகிஸ்தான் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள சிறப்பான வாய்ப்புக்கள் காணப்படுவதாக பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் இந்தோனேஷியாவில் நிருபரிடம் தெரிவித்தார். (வெ)

# மதுரையில் ரூ. 38 லட்சம் கடத்தல் பொருட்கள் சிக்கின!

## 23 இந்தியர், 10 இலங்கையர் கைது

சென்னை, நவ. 6

மதுரையிலிருந்து சுங்க அதிகாரிகளால் 38 லட்சத்து 20,000 ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இக்கடத்தல் பொருட்களில் ரெலிவிஷன் செட்டுகளும், ஒலிப்பதிவு நாடாக்களும் அடங்கியிருந்தன.

இக்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் படகு ஒன்றையும், இரண்டு இயந்திரப் படகுகளையும், நான்கு மோட்டார் கார்களையும் சுங்க அதிகாரிகள் பறிமுதல்செய்துள்ளனர்.

இதுதொடர்பாக 23 இந்தியர்களும், 10 இலங்கையர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (வெ)

## விமானக்கடத்தல் சட்டமூலத்திற்கு அங்கீகாரம்

புதுடில்லி, நவ. 6

விமானக் கடத்தல்காரர்களுக்கு ஆயுட்கால சிறைத் தண்டனையும், அபராதமும் வழங்கும் சட்டமூலத்தை இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளும் அங்கீகரித்துள்ளன. (வெ)

## கிரிக்கெட் சிம்பாப்வே4-319

லண்டன், நவ. 6

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் சிம்பாப்வே கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்று வரும் நான்கு நாள் கிரிக்கெட் ஆட்டத்தின் முதலாவது நாளான நேற்று சிம்பாப்வே கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 319 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அக்கோஷ்டியைச் சேர்ந்த அஸ்ட்றா 107 ஓட்டங்களை பெற்ற தொடர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார்.

சிம்பாப்வே கோஷ்டியின் காப்டன் பிளெச்சருக்கு காயமேற்பட்டுள்ளதால் அவர் இப் போட்டியில் விளையாடவில்லை. (வெ)

## தமிழ்நாடு மின்சார நிலைமை மோசம்

சென்னை, நவ. 6

தமிழ்நாட்டில் மின்சார நிலைமை மோசமடைந்துள்ளதால் மின்வெட்டு அமுலுக்கு வருமென்று மின்சாரத்துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (வெ)

## "பல்கலைக் கழகங்கள் விஞ்ஞான, தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்"

### பேராசிரியர் கல்பகே கூறுகிறார்

(கொழும்பு)

"விவசாய யுகத்திலிருந்து நவீன தொழில்நுட்ப யுகத்திற்குச் சென்றுகொண்டிருக்கும் நாம் எமது கலாசாரப் பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளுக்கு கூடுதலான முக்கியத்துவத்தை அளிக்க வேண்டும்."

இவ்வாறு பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவரும், உயர்கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே களனி பல்கலைக்கழகத்தின் அழகியற் பிரிவின் பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கல்வி அமைச்சினால் நுண்கலைப் பட்டப்பிரிவு 1979-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. இதனைப் பயில்வோருக்கு பாடசாலைகளில் ஆசிரியர் பதவிகளும் கிடைக்குமென்று நம்புகிறேன். தனியார்துறைகளிலும் இவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

"பாரம்பரிய கலை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்திற்கு நுண்கலைகளுக்கு முக்கிய இடத்தை அளிக்க வேண்டும்" என்றார். (வெ)

## "எந்தச் சவாலையும் ஏற்க அரசு தயாராகவுள்ளது"

### சபையில் அமைச்சர் காமினி

(கொழும்பு)

"பாராளுமன்ற முறைக்குப் புறம்பாக அரசைக் கைப்பற்ற முயற்சி நடக்கும் என எதிர்க் கட்சித் தலைவர் இந்த சபையில் கூறினார். இந்த முறைகள் தான் இப்போது வடக்கில் நடைபெற்றுவருகின்றன. அது ஒரு சவாலாக எடுக்கப்படுமானால் அதனை நாம் ஏற்றுக் கொள்ளவும் தயாராகவிருக்கிறோம்."

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா அரசமைப்புக்கான நான்காவது திருத்த சட்டமூலத்திற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக்கூறும் கூட்டணி குட்டிமணியை எம்.பி.யாக நியமித்துள்ளது. எனினும் அவர்கள் குட்டிமணியுடன் சேரமாட்டார்களென்றும், அவர் கையாண்ட வழிகளைக் கூட்டணியினர் கையாளமாட்டார்களென்றும் நம்புகிறோம்."

(இ-வெ)

## ஆசிய விளையாட்டுப் போட்டி: துப்பாக்கி, வெடிமருந்து எடுத்துச்செல்லத் தடை

புதுடில்லி, நவ. 6

புதுடில்லியில் இம்மாதம் 19-ம் திகதி முதல் அடுத்த மாதம் 4-ம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளின்போது விளையாட்டரங்கிற்குள் துப்பாக்கி, கத்தி, வாள், வெடிமருந்துகளை எடுத்துச்செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடையே அமைதியை ஏற்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக விளையாட்டதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுடில்லியில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் பொழுது குழப்பம் விளைவிக்கப் போவதாக சீக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பயமுறுத்தியுள்ளமைதெரிந்ததே.

பஞ்சாப் மாநிலத்திற்கு சுயாட்சி வழங்கும் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் இது நடைபெறும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (வெ)

## விநோபாஜி உடல்நிலை மோசம்

புதுடில்லி, நவ. 6.

பூதான இயக்கத் தலைவர் ஆச்சாரிய விநோபாஜியின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது (வெ)

## அமெரிக்கா மீது தட்சர் குறை

லண்டன், நவ. 6

போக்லண்ட் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஐ. நா. வில்கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்போது அமெரிக்கா பிரிட்டனுக்கு எதிராக வாக்களித்தமை குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்க்கரட் தட்சர் குறைகூறியுள்ளார். (வெ)

## 4 பொலிஸார் திடீர் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலீஸ் கான்ஸ்டபிள்களான திரு. ஹேமச்சந்திர, திரு. நிமால், திரு. இராசலிங்கம், திரு. பத்மநாதன் ஆகிய நால்வருமே திடீர் இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர்.

இம்மாதம் 4ம் திகதி தொடக்கம் இவர்கள் காங்கேசன்துறைப் பொலிசில் கடமையாற்ற வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர். (க)

## சாவகச்சேரி சம்பவம்: மினிபஸ்சாரதி, கிளினர் பொலிஸ் விசாரணையில்!

(பண்டத்தரிப்பு)

சாவகச்சேரி பொலிஸ்நிலைய கொலை, கொள்ளை சம்பவம் தொடர்பாக இதற்கு பாவிக்கப்பட்ட மாதகலைச் சேர்ந்த மினிபஸ்ஸின் உரிமையாளரும், சாரதியுமான வைத்திலிங்கம் தவராசா, கிளினர் துரைசிங்கம் சந்திரகுமார் ஆகியோர் நேற்று முன் தினம் காலையாழ். பொலிஸ்நிலையம் வரவழைக்கப்பட்டு, நீண்டநேரம் விசாரிக்கப்பட்டனர்.

கொழும்பிலிருந்து விசேடமாக இங்குவந்த இரகசிய பொலிஸ்கோஷ்டியொன்று இவர்களை நீண்டநேரமாக சாவகச்சேரி பொலிஸ்நிலைய தாக்குதல் சம்பவம் பற்றியும் கொலைகள் பற்றியும் துருவித் துருவி விசாரித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளையர்கள் மேற்படி இருவரையும் மினி பஸ் சின் பின்சீற்றுக்கு அடியில் கட்டிப் போட்டுவிட்டு கண்களையும் கட்டிவிட்டு இத் தாக்குதலை நடாத்தினார்கள் மினிபஸ் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது. (க)

## 3-வதுஉலக நாடுகளுக்கு கூடுதலான பொருளாதார உதவி?

லண்டன், நவ. 6

நெதர்லாந்து அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் மூன்றாவது உலக நாடுகளுக்கு கூடுதலான பொருளாதார உதவிகிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நெதர்லாந்து அரசு உதவியளித்துவருகிறது. [வெ)

# சோவியத்நாட்டில் மக்கள் ஜனநாயகத்தை உருவாக்கிய மாபெரும் அக்டோபர் புரட்சி

இன்று சோவியத் மக்கள் மாபெரும் அக்டோபர் புரட்சியின் 65 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறார்கள். மனித வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு சோஷலிஸ ராஜ்யத்தை இப்புரட்சிதோற்றுவித்தது. சுரண்டலின் சகல வடிவங்களுக்கும் முடிவுகட்டி புதியவகையான ஜனநாயகத்தை. மக்கள் ஜனநாயகத்தை உருவாக்கியதன் மூலம் சமூக, பொருளாதார அநீதிகளையும் தேசிய அடக்குமுறைகளையும் அழித்தொழிக்க வழியமைத்தது இப் புரட்சி.

(இன்று மாபெரும் அக்டோபர் புரட்சியின் 65-வது ஆண்டு நினைவு நாள்)

''20-ம் நூற்றாண்டின் உன்னத நிகழ்வு'' இவ்வாறு உலக முற்போக்காளர்கள் இதை வர்ணித்தனர். இதற்குக் காரணம் அது முன்வைத்த கோஷங்கள் செயல்வடிவம் பெற்றதும், அது பதித்த செல்வாக்கும்தான்.

சோவியத் சோஷலிஸ குடியரசுகள் ஒன்றியத்தின் 100 தேசங்களையும் தேசிய இனங்களையும் இஷ்டபூர்வமாக ஒன்றிணைத்த ஒன்றியத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படவுள்ளவேளையில் அக்டோபர் புரட்சியின் 65 வது ஆண்டு நிறைவின் கொண்டாட்டங்கள் விசேஷ முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்த ஒன்றியத்தின் சகல தேசிய இனங்களும் முன்னேற்றமடைந்த பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

## புரட்சியின் அடிப்படையில் தீர்வு

இந்த நாடு தனது வரலாற்றிலும் தனது மக்கள் வாழ்வின் தனித்துவமான நிலைபாடுகளினாலும் எதிர்கொண்ட பிரச்னைகளுக்கு ருஷ்யப் புரட்சி அடிப்படையில் தீர்வுகண்டது. அது ருஷ்யாவின் உழைக்கும் வர்க்கப் போராட்டத்தினை ஒன்றிணைத்தது விவசாயிகளிடத்தில் சோஷலிஷ மாற்றங்களை ஏற்படுத்தியது. அடக்கப்பட்ட மக்களுக்கு விமோசனமளித்தது. சமாதானத்துக்கான தேசமளாவிய ஜனநாயக இயக்கத்தை உருவாக்கியது. மனிதனை மனிதன் சுரண்டும் முறைக்கு இப்புரட்சி முடிவு கட்டியது. வெகுஜனங்கள் கல்வியிலும் கலாசாரத்திலும் முன்னேறும் வாய்ப்பைப் பெற்றனர்.

மிகச் சிக்கலான வேதனைமிக்கதான பிரச்னைகளில் ஒன்றான தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட்டது. விடுதலை, மனித உரிமை, ஜனநாயகம், சமூகநீதி என்பன அவற்றின் உண்மையான அர்த்தத்தைப் பெற்றன.

## மனிதகுலம் முழுமைக்குமான பிரச்னை

மாபெரும் அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவம் பற்றிப் பேசுகையில் லியோனிட் பிரெஷ்நேவ் வருமாறு குறிப்பிட்டார் அக்டோபர் புரட்சி தீர்வு கண்ட பிரச்சினையானது ரஷ்யாவின் வரலாறு முன்வைத்த பிரச்னைகளில் முதன்மையானது. அதே வேளையில் இது ரஷ்யாவுக்கு மட்டும் சொந்தமான பிரச்னை அல்ல. மனிதகுலம் முழுவதற்கும் முன்னாலுள்ள பொதும் பிரச்னைதான். இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பாதையைத் திறந்துவிட்டதும் அதன் மூலம், பூமியில் புதிய வகையானதொரு நாகரீகத்தை உருவாக்கியதும்தான் இந்த அக்டோபர் புரட்சியின் விசேஷ முக்கியத்துவமாகவுள்ளன.

அக்டோபர் புரட்சியின் 65-வது ஆண்டு நிறைவை அதன் பலத்தில் நின்று சோவியத் யூனியன் கொண்டாடுகிறது மகா அக்டோபரின் ஒவ்வொரு ஆண்டுநிறைவும் சோவியத் யூனியனது இயக்க ஆற்றல் மிக்க வளர்ச்சியின் ஒவ்வொரு புதிய கட்டத்தையுமே குறிக்கிறது. தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின், அர்ப்பணமிக்க உழைப்பானது சோவியத் ஒன்றியத்தின் ஒரு சக்திமிக்க தொழில்துறை,

**பி. இ. கிர்நாஸோவ்ஸ்கி**
(இலங்கை சோவியத் தூதுவர்)

விஞ்ஞான – தொழில்நுட்ப, கலாசார வளமிக்க நாடாக மாறியது. இது, இந்த நாட்டின் கம்யூனிஸ நிர்மாணத்துக்கான பணிகளுக்கு வெற்றிகரமான தீர்வுகாண வழியமைந்தது.

இன்று சோவியத் யூனியன் உலகின் தொழில்துறை உற்பத்தியில் 20 சத வீதத்தை உற்பத்திசெய்கிறது. அத்துடன் அது உருக்கு இரும்பு உருக்கு, எண்ணெய், நிலக்கரி, இரும்பு, சீமெந்து, உழவு யந்திரம் மின்சக்தி ரெயில்கள், டீசல் இழுவை யந்திரங்கள், கனிஜ உரங்கள், பருத்தி மற்றும் இதர பொருட்களின் உற்பத்தியில் உலகில் பிரதான இடத்தை வகிக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னர் அசாத்தியமானதாகவிருந்த பல பொருளாதாரப் பணிகளை நாடு இன்று கையாள்கிறது.

## பிரதான நிர்மாணப் பகுதி

முன்னர் பின்தங்கிய பகுதிகளாகவிருந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களைத் தொழில்துறையில் கட்டியெழுப்பியது இப்பணிகளில் ஒன்று. மத்திய ஆசியா, கஸாக்ஸ்தான், சைபீரியா, சோவியத் யூனியனின் தூரகிழக்கு ஆகியவற்றின் பரந்த பகுதிகளில் எரிபொருள் மூலப்பொருட்களின் உற்பத்திக்கும் தொழில்துறை வளர்ச்சிக்குமான பெரும் வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு 1982 அக்டோபர் மத்தியபகுதி தொடக்கம் சைபீரியா எரிவாயுப் பொருட்கள்உட்பட நாளொன்றுக்கு பத்துலட்சம் தொன்கள் எண்ணெயை உற்பத்தி செய்யத்தொடங்கியுள்ளது. இது 73 லட்சம் பீப்பாக்களுக்குச் சமமானது. இப்பகுதி நாட்டின் பிரதான நிர்மாணப் பகுதியாக இருந்துவந்துள்ளது. தொடர்ந்து இருந்துவரும் சைபீரியாவிலிருந்து சோவியத் யூனியன் ஐரோப்பிய பகுதிவரை ஆறு மிகப்பெரிய வாயுக்குழாய்ப் பாதைகள் வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேற்கைரோப்பாவுக்கு வாயுவை விநியோகிக்கவென யுரெங்கே முதல் யுஷ்கார்ட் வரை நிர்மாணிக்கப்பட்ட குழாய்ப் பாதையும் இதற்குள் அடங்கும். விவசாயத்துறையில், விவசாய உற்பத்தியை விரைவாக முன்னேற்றமடையச் செய்வதற்கான விரிவான உணவு உற்பத்தித்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

புரட்சியினால் உருவாக்கப்பட்ட சமுதாயத்தின் பிரதான நோக்கம் மக்களது நல்வாழ்வை மென்மேலும் உயர்த்துவதே, சோவியத ஆட்சிக்காலத்தில் தொழில்துறையைச் சேர்ந்த தொழிலாளர்களது மெய்யான வருவாய் 10 மடங்கினால் அதிகரித்துள்ளது. விவசாயிகளின் வருவாய் 15 மடங்கினால் அதிகரித்துள்ளது. இவ்வாண்டின் முதல் ஆறு மாதப்பகுதியில் தொழிலக, காரியாலய ஊழியர்களது மாதாந்த வருவாய் 2 7 சத வீதத்தால் உயர்ந்துள்ளது. சோவியத் பொருளாதாரத்தில் பணவீக்கம் கிடையாது. கடந்த 50 ஆண்டுகளில் அங்கு வேலையில்லாத் திண்டாட்டமும் இல்லை. சோவியத் அரசியல் யாப்பு, பிரஜைகளுக்கு ஜீவ முக்கியத்துவமிக்கதான வீட்டுரிமையை பிரகடனப்படுத்தியுள்ளது. உலகில் வேறெந்த நாட்டிலும் இத்தகைய பாரிய அளவு வீடு நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டதில்லை. கடந்த 10ஆண்டுகளுக்கு மேலாக. ஆண்டொன்றுக்கு 20 லட்சம் தட்டு மனைகள் என்ற வீதத்தில் நிர்மாணித்து வருகிறோம். அதே வேளையில் 1928-ம ஆண்டு முதல் வாடகையில் மாற்றமெதுவும் ஏற்பட்டதில்லை.

## சமாதானத்திட்டம்

எதிர்காலத்தில் மேன்மைக்காகவும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் உலக சமாதானத்தை உத்தரவாதப்படுத்தவும் சகல நாடுகளுக்கிடையிலும் ஒத்துழைப்புக்களை மேம்படுத்தவும் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளிலிருந்து சோஷலிச கருத்துக்களைச் செயல்படுத்தியதானது பிரிக்கப்பட முடியாதது என்று சோவியத் யூனியன் கருதுகிறது சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் அடித்தளமாகவுள்ள சமாதானத்திட்டம் உலகிலிருந்த யுத்தத்தை அகற்றவும், சுதந்திரமான வளர்ச்சிப் பாதைக்கான அனுகூலமான நிலைபாடுகளை மக்களுக்கு உத்தரவாதம் செய்யவும் வகை செய்கிறது. இது அந்நியரின் தலையீடு, அச்சுறுத்தல், அதிகாரம் அல்லது எந்தவடிவத்திலுமான நிர்ப்பந்தம் ஆகியவற்றை நிராகரிக்கிறது சோவியத் நாட்டின் ஸ்தாபகரான லெனின் உருவாக்கிய சோவியத் வெளிவிவகாரக் கொள்கையின் தர்க்கரீதியான பிரதிபலிப்பே இந்த சமாதானத் திட்டம்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது காங்கிரஸ், சோவியத் மக்கள் அனைவரினதும் ஜீவாதார நலன்களை வெளிப்படுத்துகையில், எதிர்காலத்துக்கான சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான மார்க்கங்களை வகுத்ததுடன் 1980ம் ஆண்டுகளுக்கான சோவியட் சமாதான வேலைத்திட்டத்தின் நகலையும் முன்வைத்தது, ஐ.நா. பொதுச் சபையின் இரண்டாவது விசேஷ கூட்

[5-ம் பக்கம் பார்க்க]

சங்கரத்தை

# முருகமூர்த்தி ஆலயப் புனருத்தாரணத் திருப்பணி

சங்கரத்தையில் உள்ள மருதநிலமாகிய கரந்தைக் குளவத்தையில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகன் வரலாறு இதுவாகும். செந்தமிழ்த் திறனும் சிவநெறிப் பண்பும் மிக்க சங்கர சாத்திரியார் என்னும் மகானை முருகன் தான் கதிர்காமம் போவதாகக் கூறி ஒரு நல்ல நாளில் நாடி வந்தான். நாடிவந்த அடியாரை சாத்திரியார் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தார். அடியாரும் இப்பொழுது உள்ள கோவில் மூலத்தானத்திற்கு வடக்கே இருந்த கிணற்றில் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்தவர் திடீரென மறைந்தார். நாடி வந்த அடியாரைக் காணாத சாத்திரியார் மனம் மிகவருந்தி நிற்கும் வேளையில், அருகிருந்த காவோலை ஒன்றின் கீழ் வேல் ஒன்று காட்சியளித்தது. வேலைக்கண்ட சாத்திரியார் பெருமகிழ்ச்சியடைந்து முருகனை நினைத்து உருகினர். அன்றிரவே முருகன் கனவில் தோன்றி தனக்கு மடாலயம் அமைக்கும்படி கூறினர்.

அன்றுதொட்டு இன்றுவரையும் முருகன் மடாலயத்தில் எழுந்தருளி அருள் மழை பொழிகின்றான். இம்மடாலயத்தில் இன்றும் கந்தபுராணப் படிப்பு நடைபெறுகின்றது. கந்தபுராணத்தில் முருக வழிபாட்டின் பெருமையை பார்க்கக்காணலாம். அவனை மெய்யன்போடு வழிபட்டால் புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சியை நல்குவான். செந்தமிழ் செல்வனாகிய முருகனை தீஞ்சுவை திருவூஞ்சல் பாடல்களால் நவாலியூர் தங்கத்தாத்தா என அன்புடன் அழைக்கப்படும் திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களும் அலங்கரித்திருக்கிறார்.

சங்கரத்தைக் கரந்தை என்னும் பதியில் எழுந்தருளி அடியார்க்கு அருள் சுரக்கும் கந்தப் பெருமானின் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு ஆலய பரிபாலன சபையினர் தலைவர்: திரு.எஸ்.ஆர்.கனகநாயகம் (சட்டத்தரணி), உபதலைவர்: திரு. நா. இரத்தினசிங்கம், செயலாளர்: திரு,பா. சண்முகம், உபசெயலாளர்: திரு. க. மகேஸ்வரன், பொருளாளர்: திரு. வே. பரமேஸ்வரன்] ஏறக்குறைய இரண்டு இலட்சம் ரூபா தேவையென மதிப்பீட்டு, இத்திருப்பணியில் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், வாசனசாலை, களஞ்சியஅறை, மடப்பள்ளி முதலியன புனருத்தாரண செய்வதற்கு முயற்சிகள் எடுத்து வருகின்றனர். விவசாயிகளிடமிருந்து ஏறக்குறைய ஓர் இலட்சம் ரூபா நிதியினை ஒரு மாத காலத்தில் திரட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

க. சிதம்பரநாதன்

# வளர்ச்சிக்கும், சாதனைக்கும்

## வயாவிளான் மகாவித்தியாலயம்

வளர்ந்து வரும்வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்குப் பூரண வசதிகள்கொண்ட நவீன முறையில் அமைந்த விஞ்ஞான ஆய்வு கூடங்கள் இல்லாமை அதன் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக நீண்ட காலமாக இருந்து வந்தது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல்வேறு தரத்தினர் பூரணவசதிகள் நிறைந்த விஞ்ஞான ஆய்வு கூடங்கள் தேவை என்பதை வலியுறுத்திக் காலத்துக்குக் காலம் பல்வேறு முயற்சிகள் எடுத்தனர். அவர்களின் புனிதமான எண்ணங்கள் செயலுருப் பெற்று நிறைவெய்திய பொன்னாள் இன்று. பல இலட்ச ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மேல் மாடியைக் கொண்டதும் பூரணத்துவமான நவீன விஞ்ஞான ஆய்வு கூடங்களை அடக்கியதுமான புதிய மண்டபத்தை எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் அவர்கள் திறந்து வைக்கும் நன்னாள் இன்று.

இவ்வித்தியாலயத்தை இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா [கல்வி மந்திரி] அவர்கள் 1946ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி

**'மாணவன்'**

ஆரம்பித்து வைத்தார்கள். இக்கல்லூரி உருவாதற்கு அக்காலப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சு. நடேசபிள்ளை திருவாளர் ச. ஹண்டிப் பேரின்பநாயகம், ஈழகேசரிப் பொன்னையா, வழக்கறிஞர் வ. இராசநாயகம் இன்னும் பல பெரியார்கள் அரும்பாடுபட்டு முன்னின்று உழைத்தனர். இரு கிடுகுக் கொட்டில்களில் 115 மாணவர்களுடன் அதிபரோடு 3 ஆசிரியர்களைக் கொண்டே ஆரம்ப காலத்தில் இக் கல்லூரி இயங்கியது. ஆரம்பகால அதிபராகத் திரு. க. காராளசிங்கன் அவர்கள் கடமையாற்றினார்கள்.

பல துறைகளிலும் படிப்படியாக கல்லூரி வளர்ச்சியுற்று வந்தது. திருவாளர்கள் K. நவரத்தினராசா, E. V. ஹென்ஸ்மன், பொ. சபாரத்தினம், என்போர்கள் அதிபர்களாகவும் திருவாளர்கள் C.T. சின்னையா, சி. ஆறுமுகம் என்போர்கள் பதில் அதிபர்களாகவும் கடந்த காலங்களில் கடமையாற்றிக் கல்லூரி

[5-ம் பக்கம் பார்க்க]

## திருத்தம்

எங்கள் நேற்றைய பிரசுரத்தின் ஆசிரியர் தலையங்கம் அமரர் ''ஏ.எல்.'' தொடக்கத்தில் குறள் ''பயன் மரம்'' என்று தொடங்க வேண்டும். ''பழுமரம்'' அல்ல.

# “சர்வஜன வாக்கெடுப்பு ஆதரிக்குமாறுகூட்டணி மக்களுக்கு கோரிக்கைவிடும்”

## அமைச்சர் ‘லலித்’ நம்பிக்கை

(கொழும்பு)

''அரசியலமைப்புத்தொடர்பான விவாதங்களைப் பகிஷ்கரித்து வந்த கூட்டணியினர் பின்னர் அறிக்கைவிட்டுவிட்டு வெளியேறுவதாகக் கூறிக்கொண்டு சபைக்கு வந்தனர். இன்று இந்த விவாதத்தில் கலந்துகொண்டார்கள். அவர்கள் நிச்சயம் வடக்கே சென்று சர்வஜன வாக்கெடுப்பை ஆதரித்து வாக்களிக்குமாறு மக்களுக்கு கோரிக்கை விடுவார்கள் என்று நான் நிச்சயமாகக் கூறுகிறேன்.''

இவ்வாறு வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அரசமைப்புக்கான நான்காவது திருத்த சட்டமூலவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சிறிமாவின் குடியுரிமையை மீண்டும்பெறுவதற்கும், 1980ம் ஆண்டு ஜூலை வேலைநிறுத்தத்தில்வேலை இழந்தவர்களுக்கு மீண்டும்வேலை பெற்றுக்கொடுப்பதற்கும்நடந்துமுடிந்த ஜனாதிபதி தேர்தல் பயன்படுத்தப்பட்டது. ஈற்றில் என்ன நடந்தது நாமே அமோகமாக வெற்றிபெற்றோம்.

''தற்போது சுதந்திரக் கட்சியிலுள்ள ஜனநாயகவாதிகள், கட்சியின் அதிகாரத்தைக்கைப்பற்றுவதற்கு முயன்றுகொண்டிருக்கும் நக்ஸலைட்டுகளுக்கு பயந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் ஐ.தே.க.வுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்'' என்றார். (இ-வெ)

# சோவியத் நாட்டில் மக்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டத் தொடர்ல் அணுவாயுதங்களை முதலில் தான் பயன்படுத்தப்போவதில்லை என்று ஒருதலைப்பட்சமான வரலாற்று முக்கியத்துவமிக்க அறிக்கையை சோவியத் யூனியன் இவ்வாண்டு வெளியிட்டது. ஐ. நா பொதுச்சபையின் 37வது கூட்டத் தொடரில் சோவியத் யூனியன் பல புதிய பிரதான ஆலோசனைகளை முன்வைத்தது.

இருபத்தைந்து ஆண்டுகளை அடைந்துவிட்ட சோவியத்-இலங்கை நட்புறவுகள் ஒரு வளர்ச்சிபெற்ற நாட்டிற்கும் ஒரு வளர்முக நாட்டிற்கும் இடையிலான நட்புறவுகளுக்கு நல்லதோர் உதாரணமாகும். இரு நாடுகளுக்குமிடையில் உயர்மட்ட தொடர்புகள் நிலவுகின்றன. இரு நாட்டு மக்களும் மனித குலத்தின் சமாதானபூர்வமிக்க எதிர்காலத்தின் மீது பேரக்கறைகொண்டுள்ளனர். இரு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதின் சோவியத் விஜயம் அமைந்திருந்தது. அதேபோல் பல சோவியத் அமைச்சர்களும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

இரு நாடுகளுக்கிடையிலுமான பரஸ்பரம் அனுகூலமிக்க ஒத்துழைப்புக்களை விஸ்தரிக்கும் வகையில் அண்மையில் பல உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை நாடு அமைந்துள்ள இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் சமாதானத்துக்கு எதிரான கொள்கைகளைச் சில சக்திகள் பின்பற்றுவதனால் உலக அரசியல் நிலைமை சீர்குலைய நேரிட்டுள்ளது. இந்து சமுத்திரத்திலிருந்துசகலவெளிநாட்டு ராணுவங்களும் வெளியேறவேண்டுமென்றுவலியுறுத்தும் இந்நாடுகளின் நியாயமான கோரிக்கைக்குப் பூரண ஆதரவளிக்கும் சோவியத் யூனியன் இப்பகுதியின் அணு ஆயுதங்களற்ற மண்டலத்தை உருவாக்கவேண்டும் என்ற கருத்தை இடையறாது வலியுறுத்திவருகிறது.

சமாதானத்தை நேசிக்கும் சகல நாடுகளினதும் சக்திகளினதும் கூட்டான முயற்சிகள் தாம் நிலையான சமாதானத்தையும் நாடுகளுக்கிடையில் நம்பிக்கையையும் நல்விளப்பத்தையும் ஏற்படுத்தக்கூடியவை. இவைதான் மகா அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி ஏற்படுத்திக் கொடுத்துள்ள உன்னத லட்சியங்கள். (க)

## பண்ணையிலுள்ள தன்னியக்க தொலைபேசிப் பரிவர்த்தனை ஊழியர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில், வெள்ளம் தேங்கி நிற்பதால், அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் பலத்த சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பண்ணை பகுதியில் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இரவில் பண்ணைக்கு செல்லும் வீதியில் போதிய வெளிச்சம் இல்லாததினால் தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் அவ்வீதியால் செல்வதற்கு அஞ்சுகின்றனர். (க)

## சிறிமா அடுத்த வாரம் வவனியாவுக்கு விஜயம்

(வவனியா)

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வவனியாவுக்கு அடுத்த வாரம் வரலாம் என நம்பகமாகத் தெரிகின்றது.

அதேவேளை நடந்து முடிந்த ஜனாதிபதிதேர்தலில் வவனியாவில் கணிசமான வாக்கு சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்ததையிட்டு வன்னித் தொகுதி சுதந்திரக் கட்சி பிரதம அமைப்பாளர் திரு. எம். நடராசா தமது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்து பகிரங்க அறிக்கை ஒன்றும் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் முக்கிய தமது கட்சிக் கிளைப் பிரமுகர்களுக்கும் தனித்தனியாக நன்றி தெரிவித்துக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். (க)

## தமிழர்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறி எம்மையெல்லாம் ஏமாற்றி வருகிறார்கள். இது ஒரு பெரும் தில்லுமுல்லு, தமிழர் விடுதலைக் கூட்டணியினரே தமிழ் இளைஞர்களைப் பயங்கரவாத வழிக்கு இட்டுச் செல்கிறார்கள்.'' என்றார். (இ-வெ)

# “வருடாந்தம் புதிய மாணவர் தொகை 30வீதம் அதிகரிப்பு

## வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் தகவல்

[பண்டத்தரிப்பு]

''எமது கல்விப் பிராந்தியத்தில் வருடாந்தம் சுமார் 400 பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான தளபாடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தக்க நிதியே ஒதுக்கப்படுகின்றது. இந்த நிதியைக்கொண்டு இப்பிராந்தியத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் தளபாடத் தேவைகளை நாம் பூர்த்தி செய்துவிட முடியாது. பெற்றோர்களும்: நலன்விரும்பிகளும் இணைந்து செயல்பட்டு மாணவர்களுக்கு தளபாடவசதிகளை செய்துகொடுக்கமுன் வரவேண்டும்''.

இவ்வாறு சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயத்தின் பெற்றோர்தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கூறினார்.

சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. எச். ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பாடசாலை அதிபர் சங். சகோதரி மேரி கொன்ஸ்ரன்ரைன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. சிமியாமபிள்ளை அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''வருடாந்தம் பாடசாலையில் புதிதாக சேரும் மாணவர்களின் தொகை 30 வீதத்தால் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இந்த புதிய மாணவர்களுக்கேற்ற தளபாட வசதிகள், கட்டிட வசதிகள், ஆசிரியர் நியமனம் போன்றவற்றை செய்து கொடுக்கவேண்டியது எமது கடமையாகும். இதை கல்வித் திணைக்களம் மட்டுமே தனித்து நின்று நிறைவேற்றிவிட முடியாது. பாடசாலைகளில் இயங்கிவரும் அபிவிருத்திச் சங்கங்கள் இவ்விடயத்தில் சிரத்தை எடுத்து சமுதாயத்தின் ஒத்துழைப்புடன் தேவைகளை நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டும்.

கல்வியோடு ஒழுக்கமும் சேர்ந்து பாடசாலைகளில் மாணவருக்கு புகட்டப்பட வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமானதாகும். மாணவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பாடசாலையில்

[8-ம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்ற ஆயுள் நீடிப்பு: செங்கொடிசங்கம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மேலும் ஆறுவருடங்களால் நீடிப்பதற்காக மக்கள் கருத்தை அறியும் சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவதற்கான ஐ. தே. கட்சியின் முடிவானது மக்கள் அனுபவித்துவரும் ஜனநாயக உரிமைகளை இல்லாமல் செய்வதற்கும் 50 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் நிலைபெற்றுள்ள தேர்தல்நடைமுறைக்கு முற்றுப்புள்ளிவைப்பதற்குமான ஒரு முயற்சியாகும் என்று இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடிச்சங்கத்தின் தலைவர் திரு.எச்.எல். கே. கரவிட்ட விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கையை இலங்கை தோட்டத் தொழிலாளர்சங்கம் கண்டிக்கிறது. இதனை முறியடிக்க தொழிலாளர் வர்க்கத்தையும் மற்று சகலதேசபக்தா ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் தமது சக்தியை ஒன்று திரட்டுமாறும் அரசின்சர்வாதிகார நோக்கத்தை தோற்கடிக்குமாறும் அறைகூவல் விடுக்கின்றது'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வளர்ச்சிக்கும்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சிக்கு நிறைந்த தொண்டாற்றியுள்ளனர். கல்லூரியின் வெள்ளிவிழா 1972ம் ஆண்டு திரு. பொ. சபாரத்தினம் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வெள்ளிவிழா ஞாபகச்சின்னமாக அரசாங்க உதவியின்றி பெற்றோர், ஆசிரியர், மாணவர், பழையமாணவர்கள் உதவிகொண்டுஒருமண்டபம் அமைத்தமை குறிப்பிடத்தக்க செயலாகும்.

தற்போதைய அதிபர் திரு. ஆ. இராமசாமி அவர்கள் அதிபராக பதவி ஏற்றபின் க. பொ. த உயர்தரவகுப்புக்கள் (விஞ்ஞானம், கலை, வர்த்தகம், விவசாயம், நுண்கலை சகலதுறைகளிலும் ஆரம்பிக்கப்பட்டன. கல்வியைத் தொழிலாகக் கொள்ளாமல் சேவையை புனிதமான சேவையெனக் கருதித் தொண்டாற்றிய வடமாகாணத்தில் வாழ்ந்த பழம்பெரும் அதிபர்களின் வரிசையில் வந்த அதிபர் திரு. ஆ. இராமசாமி அவர்கள் கடமையாற்றும் இவ்வேளையில் கடந்தகால அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் நினைவில் இருந்த பல எண்ணங்கள் செயல்வடிவம் பெற்றன. அதிபருக்கு உதவியாக கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் சிறந்த சீரிய தொண்டாற்றி வருகின்றனர்.

வடமாகாண முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாக வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் விளங்குகின்றது.

கல்லூரிக்குப் பெரும்பயனையும் அழகையும் அளிக்கும் விஞ்ஞான ஆய்வுகூடங்களை உருவாக்குவதில் அதிபரின் அயராதமுயற்சிக்கு ஊக்கமளித்து பலவகைகளில் உதவி புரிந்தோர் பலர், இக்கட்டடத்துக்கு வேண்டிய நிதியின் பெரும்பகுதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து அமரர் சி, கதிரவேற்பிள்ளை அவர்கள் காலத்துக்குக்காலம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் அவர்களும், மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் அவர்களும் கட்டடத்தை ஆரம்பிப்பதற்கு தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில்இருந்து கணிசமான தொகையை ஆரம்பகாலத்தில் கொடுத்து உதவினர். கோப்பாய்பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை அமரத்துவம் அடைந்தபின் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராக வந்த திரு. மு ஆலாலசுந்தரம் அவர்களும் காலத்துக்காலம் தேவையான நிதியைப் பெற்றுத் தருவதில் பேருதவி புரிந்துள்ளார்கள். இக்கல்லூரியின் வளர்ச்சியில்ஆவலும் அக்கறையும் கொண்ட அனைவருக்கும் இந்நாள் இன்பநாள்.

திருமணம், புதுமனைப்புகுவிழா
மற்றும் வரவேற்பு உபகரணங்களா? எதுவானாலும்
விருந்தினர்களது மனம் குதூகலிக்க
பேப்பர் பிளேட், பேப்பர் கப், கேக் கப், ஐஸ்கிறீம் கப், கறண்டிகள்
பெருமளவில் விற்பனை செய்கிறோம்.
★ எவர்சில்வர் பாத்திரங்கள் ★ சுவர் மணிக்கூடுகள் ★ வெடிங்கார்ட்
★ பிறந்ததின வாழ்த்துக்கள் ★ மின்சார உபகரணங்கள் ★ காகிதாதிகள்
★ பாடசாலை உபகரணங்கள் அனைத்துக்கும்
அம்பலவாணர் அன் சன்ஸ்
(கடைத்தெரு விநாயகர் ஆலயம் முன்னால்)
196, கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன் 24291

# 'ஜனநாயக உரிமைகளை நசுக்கும்செயலை முறியடிக்கத் தயங்கோம்'

## பாராளுமன்றத்தில் 'அமிர்'

(கொழும்பு)

''மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் ஜனநாயக விரோத செயலை நாம் முறியடிக்கத் தயங்கமாட்டோம். யாருடன் என்ன பேச்சுவார்த்தை நடத்தினாலும்சரி, ஜனநாயகத்திற்கு மாறான நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம்.''

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக்கான நான்காவது திருத்தச் சட்டமூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''கடந்த ஆட்சிக்காலத்தில் சுதந்திரக்கட்சி எப்படிநடந்து கொண்டது, என்ன செய்தார்கள் என்று சொல்வதனால் மக்கள் பிரச்னை தீர்ந்துவிடாது. கடந்த ஆட்சிக்காலத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டபோது இப்போதைய ஜனாதிபதி அன்று என்ன முடிவை எடுத்தாரோ அதையே நாங்களும் எடுக்கத் தீர்மானித்துள்ளோம். 1977ம் ஆண்டில் அரசாங்கம் மக்கள் ஆணையைப் பெற்றபோது நாமும் எமது ஆணையைப் பெற்றோம்.

### குறுக்கீடுகள்

இவ்வேளையில் அரசாங்கத் தரப்பின் பின்வரிசையிலிருந்து குறுக்கீடுகள் இடம்பெற்றன.

அமிர்: என்னைப் பேசவிடுங்கள். தயவுசெய்து குறுக்கீடு செய்யவேண்டாம்.

அமிர் தொடர்ந்து பேசுகையில்:

''யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, வவனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற அபிவிருத்திசபைதேர்தல்களில் மக்களின் ஆதரவைப்பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றினோம். யாழ். மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலில் பல தில்லுமுல்லுகள் இடம்பெற்றும் நாம் அத்தேர்தலில் மாபெரும் வெற்றிபெற்றோம்.

''ஐ. தே. கட்சியில் பலர் ஜனாதிபதியிடம் ராஜினாமாக் கடிதங்களைக் கொடுத்துவிட்டு, எப்போது பதவி பறிபோகுமென்று ஏங்கிக்கொண்டுள்ளனர். நீங்கள் ஏன் தேர்தலை நடத்தப் பயப்படுகிறீர்கள்?

பிரதமர்; ஜனாதிபதி தேர்தலில் மக்களின் பூரண ஆதரவைப் பெற்றுவிட்டோம்.

அமிர்: பாராளுமன்றத்தேர்தலை நடத்தமாட்டோமென்று, ஜனாதிபதி தேர்தலின்போது மக்களிடம் கூறினீர்களா?

திரு. அமிர்தலிங்கம் பேசிக்கொண்டிருந்தபோது பிரதமமந்திரி பிரேமதாசா, அமைச்சர் முகமத், இரத்தினபுரி எம். பி. புஞ்சிநிலமே ஆகியோர் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருந்தனர். ஒரே நேரத்தில் பல குரல்களும் ஒலித்தன.

ஒரு குரல்:- குட்டிமணி...

புஞ்சிநிலமே:- எமது ஜனாதிபதி அரைமணித்தியாலத்தில் எம்மிடமிருந்து ராஜினாமா கடிதங்களைப் பெற்றார். உங்களின் உறுப்பினர்களின் ராஜினாமாக் கடிதத்தை அவ்வாறு பெற முடியுமா?

அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்;

''ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அரசியலமைப்புக்கு எதிராக அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. நீங்கள் இந்த நிலைமையைக் கடைப்பிடித்தால் பாராளுமன்றத்திற்குப் புறம்பான வழியில் சிலர் ஆட்சியை கைப்பற்றமுயலலாம்'' என்று கூறினார். (இ-வெ)



## சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தையா முத்துலிங்கம் யாழ். மாவட்ட நீதிபதி எம். டி. ஜேசுரட்ணம் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதானநீதவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் தலைவரும், கிராமோதய சபையின் அங்கத்தவரும், கல்வியங்காடு வீரபத்திரர் ஆலய நிர்வாகசபையின் அங்கத்தவரும், அகில இலங்கை வணிகர் கழகத்தின் உபதலைவருமான இவர், பரமேஸ்வரா கல்லூரியின் உதைபந்தாட்ட வீரருமாவார்.

## கடித எழுத்துப் போட்டி

(கரவெட்டி)

சுவிற்சிலாந்து சர்வதேச அஞ்சற் சமாசம் பாடசாலை மாணவர்களுக்கிடையே கடித எழுத்துப் போட்டி ஒன்றை நடாத்த முடிவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப சமாசத்தில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை அஞ்சல்நிர்வாகம் இலங்கை மாணவர்களையும் இப் போட்டியில் பங்குபற்றச் செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

மாணவர்களிடையே கடிதம் எழுதும் பழக்கத்தை ஊக்குவிப்பதையும், சர்வதேச உறவினைப் பலப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு நடாத்தப்படும் இப் போட்டியில் ''நாடுகளுக்கிடையில் அஞ்சல் ஓர் இணைப்புப் பாலமாக விளங்குகின்றது'' என்ற விடயத் தலைப்பை சர்வதேச அஞ்சற் சமாசத்தின் நிறைவேற்றுச் சபை தெரிவு செய்துள்ளது.

1983ம் ஆண்டிற்கான இப் போட்டியில் 15 வயதிற்கு உட்பட்டோர் மாத்திரம் பங்குபற்ற முடியும் என்றும் கடிதங்கள் 500 முதல் 1000 வரையிலான சொற்களைக் கொண்டு இருக்க வேண்டும் என்றும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் மாத்திரம் கடிதங்கள் எழுதப்பட்டு பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

போட்டியில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று கடிதங்களுக்கும் பதக்கங்களும், சிறப்புக் கடிதங்களுக்கு விஷேட பரிசுகளும் வழங்கப்படும். அத்துடன் இலங்கை அஞ்சல் அலுவலகமும் ஒவ்வொரு மொழியிலான சிறந்த கடிதத்திற்கும் மூன்று பரிசுகளை வழங்கவும் முடிவு செய்துள்ளது. (வெ)

## இவர்களுக்குப் பதவி உயர்வு

[புலோலி]

பருத்தித்துறை கல்வி வட்டாரத்தில் நான்கு அதிபர்கள் 5ம் தர அதிபர்களாகவும், இரண்டு அதிபர்கள் 3ம்தர அதிபர்களாகவும் கல்வி அமைச்சினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் திரு வீ. கே. ஏகாம்பரநாதன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு டபிள்யூ. என். எஸ். சாமுவேல். வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கனகசுந்தரம். உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் திரு கே. இராசலிங்கம் ஆகியோர் 5ம்தர அதிபர்களாகவும் நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபர் திரு கே. பரமகுரு, செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன்பாடசாலை அதிபர் ஆர். எஸ். சர்மா ஆகியோர் 3ம்தர அதிபர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனரென அறிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தலை விளானில் கழுகு!

(யாழ்ப்பாணம்)

கடந்த சில வாரங்களாக வர்த்தலை விளானில் கழுகு உலாவிவருவதாக அறிவிக்கப் படுகிறது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பு இப்படி ஒருகழுகு குப்பிளான் பிள்ளையார் கோவிலடியில் வந்து இறங்கியமை குறிப்பிடத்தக்கது. ஓரிருவாரங்களுக்கு முன் இதே போன்ற ஒரு கழுகு வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் வந்திறங்கியது. சிலமணிநேரத்தின் பின் பறந்து சென்று விட்டது. மீண்டும் இக்கழுகு கடந்த புதன் கிழமை வர்த்தலை விளானில் உள்ள பனைமரம் ஒன்றிலிருந்து கத்தியதாகவும் ஒரு மணி நேரத்தின் பின் பறந்து சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

## 5ம் தர அதிபராக பதவி உயர்வு

(கரவெட்டி)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பி. இராசேந்திரசிங்கம் கல்விச் சேவையின் 5ம்தர அதிபராக கல்வியமைச்சினால் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.


**R. P. G. - II - ஆர். பி. ஜி. II**

**Computer Programming Course**

**கம்பியூட்டர் நிகழ்ச்சிமுறைப் பயிற்சி நெறி**

**I. B. M. System / 34 Computer**

**(I. B. M. முறைமை R. P. G. II கம்பியூட்டர் நிகழ்ச்சி முறைப் பயிற்சி நெறி)**

R. P. G. II நிகழ்ச்சி முறையினைக் கற்று கம்பியூட்டர்

**விற்பன்னராகுங்கள்**

| | |
|---|---|
| பயிற்சி முறை: | 8-11-1982 திங்கட் கிழமை முதல் ஆறு வாரப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. |
| நிலை i | எண்முறைக் கம்பியூட்டருக்கு அறிமுகப்படுத்தல். |
| நிலை ii | நிகழ்ச்சி முறை பற்றிய எண்ணக் கருவூட்டம். |
| நிலை iii | R. P. G. II நிகழ்ச்சி முறையிடல். |
| நிலை iv | விடயப்படிப்பு PRACTICAL TRAINNING ON COMPUTER. |
| நிலை v | கம்பியூட்டர் மூலம் கம்பியூட்டர் பயிற்சி. COMPUTER ASSISTED TRAINING |
| பயிற்சிக் கட்டணம்: | ரூபா 6,000/- மட்டுமே. |
| கல்வித்தகைமை: | க.பொ.த.(சாதாரணம்) கணிதம் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| தெரிவு: | உளச்சார்புப் பரீட்சையின் தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். |

**R. P. G. II நிகழ்ச்சிமுறைப் பயிற்சி பெற்ற விற்பன்னர்கட்கு இலங்கையில் மட்டுமின்றி அகில உலகத்திலும் வேலை வாய்ப்பு உண்டு.**

தொடர்பு கொள்ளவேண்டியது:

**GLOBAL COMPUTERS (PTE) LDT.**

**குளோபல் கம்பியூட்டர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்,**

இல: 14, 1/1, ஸ்ரப்ஸ் பிளேஸ், கொழும்பு-5

14, 1/1, Stubbes Place, Colombo-5

தொலை தொடர்பு: 580551

மேலும் விபரங்கட்கு:-

குளோபல் கொம்யூனிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்.

(யாழ். கூட்டுறவு பன்முகப் பணிமனைக் கட்டிடம்)

127, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

பிறர் வாயாற் கூறுவதை குளோபல் செயற்படுத்தும்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனு
**காதலிக்க நேரமில்லை**
(புதிய பிரதி) (கலர்)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
**மௌன கீதங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்


# 'என்வாழ்வில் இப்படியொரு சம்பவம் முன்னர் நடக்கவில்லை''

## பெண் கடத்து வழக்கில் சாட்சியம்

(புலோலி)

எனது வாழ்க்கையில் இச்சம் பவம்போல் முன்னர் ஒரு சம் பவமும் நடக்கவில்லை இச்சம் பவம் எனது மனதில் பெரும் அதிர்ச்சியையும் வேதனையை யும் ஏற்படுத்தியுள்ளது''

இவ்வாறு வல்வெட்டித் துறை பெண்கடத்தல் வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த செல்வி ஈஸ்வரபாதம் சரோ ஜினி வயது 21) எதிரிகள் சார் பில் ஆஜரான சட்டத்தரணி கனக மனோகரனால் தொடர் ந்து குறுக்கு விசாரணை செய் யப்படும்போதுகுறி பிட்டார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தர லிங்கம் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைசெய்யப் பட்டுவருகின்றது.

பொலிசார் சார்பில் வல் வெட்டித்துறை பொலிஸ் சார் ஜண்ட் தம்பிஐயாவும் பொலி சாருக்கு உதவியாகச் சட்டத் தரணிகளான ஆர். ஸ்ரீசிவாயா எம். வேலும்மயிலும், ஆர். டி. இரத்தினசிங்கம், கே. எஸ். முத்துக்குமாரு ஆகியோர் ஆஜராகிஇருந்தனர்.

1ம் எதிரி சார்பில் சட்டத் தரணி கனக மனோகரனும், 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செல்வி விஜயராணி மகா தேவாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி கனக. மனோகர னும், 2ம், 5ம், 6ம், 9ம் எதிரி கள் சார்பில் சட்டத்தரணி எஸ். சிவனருள்சுந்தர(காண் டீபன்)த்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி வி. செல்லத் தம்பியும், 8ம் எதிரி சார்பில் சட்ட தரணி கே எஸ். பால கிருஷ்ணனும் ஆஜராகி இருந் தனர். தொடர்ந்து குறுக்கு விசாரணைசெய்யப்பட்டசாட்சி குறி பிட்டதாவது:

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டேன். அங்கு வாக்குமூலம் கொடுக்க வில்லை காங்கேசன்துறைப் பொலிசில் என்னுடைய பெய ரையும், என்ன நடந்ததென் பதையும் கேட்டார்கள். பின் னர் நீங்கள் ஒன்றும்சொல்ல வேண்டாம் வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத்திற் குப்போய்ச் சொல்லுங்கள் என்று கூறி என்னிடம் கையெ ழுத்து வாங்கினர்கள். அடுத்த நாள் வல்வெட்டித்துறையில் வாக்கு மூலம் கொடுத்தேன்.

வல்வெட்டித்துறைப் பொலி சிற்குக் கொடுத்த வாக்குமூலத் தில் 4, 5 பேர் வந்து என்னைத் தூக்கிக்கொண்டு போனர்கள் என்று நான் சொல்லவில்லை. வானின் நிறத்தையும் கூற வில்லை என்று சொல்லியிருக் கிறேன். வானைச் சம்பவம் நடந்த அன்று கண்டேன். அதன்பின் அவ்வளவாகக் காணவில்லை. பொலிசிற்குக் கொடுத்த வாக்குமூலத்தில் வெள்ளைநிறவான் என்று கூறி னேன். வானின் ரகங்கள் பற்றி எனக்குத்தெரியாது. என்னை ஏற்றிச்சென்ற வானும் என்னரகவான் என்பது எனக் குத்தெரியாது. காங்கேசன் துறைப் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் வானின் ரகம் சொல்லவில்லை வான் என்றுதான் கூறினேன். அன்று எனது உடம்பில் இரு வரின் கையைத்தவிர வேறு எவருடையகையும் படவில்லை. அந்த இருவர் ஜெய்சங்கரும், பிரேம்ராஜனும்தான். அடை யாள அணிவகுப்பில் விஜய குமார் என்னைத் தெருவில் இழுத்துக்கொண்டு போனர் என்று கூறவில்லை. 7ம் எதிரி என்னை இழுத்துக்கொண்டு செல்லவில்லை. ஆனல் வானில் பிடித்து ஏற்றமுயற்சித்தார். ஜெய்சங்கர் என்னை வீட்டி லிருந்து இழுத்துக்கொண்டு போகும்போது அக்கா பத் மினி தடுத்ததைப் பற்றி எனக்குத்தெரியாது.

யார் தூக்கிக்கொண்டு போனது என்று கேட்க எனக் குப்பெயர்தெரியாது கண்டால் காட்ட முடியும் என்று கூறி னேன். பலர்வந்தபடியினலும் எல்லோருடைய பெயர்களும் தெரியாதபடியினலும் பெயர் குறிப்பிடவில்லை. என்னை இழுத்துச்சென்றவரின் பெயர் தெரியும். ஆனல் குறிப்பிட வில்லை. சம்பவதினம் பலர் வந்தபடியால அவர்களில் சில ருடைய பெயர்தெரிந்தும் சில ருடைய பெயர் தெரியாதபடி யாலும் ஒருவருடைய பெயரை யும் நான் குறிப்பிடவில்லை. எனது வாழ்க்கையில் இச்சம்ப வத்தைப்போல் ஒரு சம்பவமும் நடக்கவில்லை. இச்சம்பவம் எனது மனத்தில் பெரிய அதிர்ச்சியையும், வேதனையை யும் உண்டுபண்ணியது.

# நடேஸ்வரா பிரிவுச் சாம்பியனுகத் தெரிவு

(காங்கேசன்துறை)

யாழ்ப்பாணப் பாடசாலை கள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் பாடசாலைகளுக்கி டையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 1ம் பிரிவில் காங் கேசன்துறை நடேஸ்வராக்கல் லூரி பிரிவுச் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டு அரை இறுதிப்போட்டிகளில் கலந்து கொள்ளும் நிலைக்குத் தெரிவா கியுள்ளது.

நடேஸ்வராக் கல்லூரிக் கோஷ்டியினர் தமது பிரிவில் வசாவிளான் மத்திய மகா வித் தியாலயத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியையும் 3–1 கோல்களினல்தோற்கடித்தனர் நடேஸ்வராக் கல்லூரிக்கோஷ் டியி னர் சிநேகபூர்வமாகக் கலந்து கொண்ட போட்டிக ளில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, காங்கேசன்துறையங் ரேயல் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் மோதிவெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டனர்.

கடந்தவருடம் பாடசாலை களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிக ளிலும் காங்கேசன்துறை நடே ஸ்வராக் கல்லூரி இறுதிப் போட்டிகளில் கலந்து கொண் டது குறிப்பிடத் தக்கது. (அ)

# கணவனைபிரிந்து தாய் வீடுசென்றவர் தற்கொலை!

[கிளிநொச்சி]

கணவனைப்பிரிந்து தாய்வீடு சென்ற மனைவியை வீட்டிற்கு வரும்படி கணவன் வலியுறுத தியதால் ஆத்திரமடைந்த மனைவி நச்சுத்திராவகம் அரு ந்தி தற்கொலை செய்துகொண் டார்

சுண்டுக்குளத்தை சேர்ந்த சிவரெத்தினம் ஆச்சிமுத்து [48 வயது] என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட விப ரம் தெரியவந்தது.

இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதி காரி திரு. முருகேசு யோகலிங் கம் மேற்கொண்டார். கிளி நொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவை சேர்ந்த ஜனப் ஆர். ரி பரீத் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

கணவர் சிவரெத்தினமும் சாட்சியமளித்ததை தொடர் ந்து தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. [க]

# லொறியைச் சோதனையிட்ட பொலிசார் 2500 ரூபாவை அபகரித்த தாகப் புகார்

(மன்னர்)

கொழும்பு நோக்கிச் சென்ற மீன் லொறியை வழிமறித்து சோதனை நடத்திய பொலிசார் லொறியினுள் வைக்கப்பட்டி ருந்த 2500 ரூபா பணத்தை அபகரித்துச் சென்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

பேசாலையைச் சேர்ந்த வர்த் தகரான அருள்சீலன் பெர்ன ண்டோ என்பவருக்குச்சொந்த மான லொறியையே கடத்தி திங்கட்கிழமை இரவு முருங் கனில் வைத்து வழிமறித்து பரிசோதனை செய்த பொலி சார் லொறியினுள் இருந்த பணத்தை அபகரித்தனர் என்று புகாரில் கூறப்பட்டுள் ளது.


ஓம் மீன்லொறி பேசாலையி லிருந்து கொழும்பு நோக்கிச் சென்றபோது முருங்கனில் வைத்து ஒரு பொலிசாரும், 3 இராணுவத்தினரும் லொறியைவழிமறித்தனராம். லொறியை வழிமறித்த பொலிசாரும், இராணுவத்தி னரும் லொறியில் அபின்கடத் தப்படுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது. என்று அத ஞல் லொறியைச் சோதனை யிடவேண்டுமெனக்கூறிலொறி யின் சாரதியையும் நடத்துன ரையும் கீழே இறக்கிவிட்ட னர். என்றும் கூறப்படுகிறது.

சாரதியும், நடத்துனரும், 3 இராணுவத்தினரும் கீழே நிற்க பொலிஸ்காரர் மட்டும் லொறியைச் சோதனை யிட்டதாகவும் அப்போது லொறியினுள்இருந்த2500ரூபா பணத்தை அபகரித்துச் சென் ருர் என்றும் கூறப்படுகிறது.

மன்னர் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் லொறி உரிமையாளர் மேற்கண்ட வாறு புகார் செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மன்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ் வரன்விசாரணை மேற்கொண்டு வருகிருர். (க)

# சமாதான நீதிபதி



கோண்டாவிலைச் சேர்ந்த திரு. சு சுந்தரம் யாழ். மாவட்டத்திற்கு சமாதான நீதிபதியாக நீதி அமைச்சரி ஞல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் விவேகானந்தா படிப் பகம், சனசமூக நிலையம் ஆகிய வற்றின் முன்னள் தலைவரும், தற்போதைய பொருளாள ரும், கோண்டாவில் மகாவித் தியாலய பெற்ரோர் ஆசிரியர் சங்க உறுப்பினருமாவார்.

# சுகாதாரப்பகுதி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு, யாழ். மாநகரசபை சுகாதார பகுதி ஊழியருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்க ளுக்கு சுகாதார பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ள னர்

பெரிய மரங்களை வெட்டி முழுசாகப் போடாமல் துண்டு துண்டாக வெட்டிப்போடுமா றும், குப்பைகளை ஒரே இடத் தில் குவிக்குமாறும் அந்த வேண்டுகோளில் கோரப்பட் டுள்ளது. (க)


சாந்தி (யாழ்.நார்) தினசரி 4 காட்சிகள் இன்று மட்டும்
ஷா நவாஸ் - சுமதி
**பாதைமாறிய பருவங்கள்**
விரைவில்! எம். ஜி. ஆர். நவரத்தினம் (கலர்)

றீகல் (யாழ். நகர்) சில தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ரஜினிகாந்த் — ரதி
**முரட்டுக்காளை** (கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

கடைசி வாரம்
லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி 6-15, 9-15, சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
**ரகசியப் பொலிஸ் 115**
(கலர் – புதிய பிரதி)

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார்-ஜெய்கணேஷ்-லதா-சுபாஷினி
**அழகே உன்னை ஆராதிக்கிறேன்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
கல்யாணகுமார் - முத்துராமன் - தேவிகா
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
[யாழ்.நகரில் கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகிறது]
(புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
**என்னைப்போல் ஒருவன்**

**WINDSOR** (Jaffna) Daily 5 Shows
**'RISE AND FALL OF IDI AMIN'**
Murder Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்——
உகண்டா ஜனதிபதி இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்--

# தம்பிஐயாவுக்கு ஜே. ஆர்; சிறிமா இறுதி அஞ்சலி

(கொழும்பு)

முன்னாள் தீவுப்பகுதி எம். பி திரு. எ எல். தம்பிஐயாவின் பூதவுடலுக்கு கனத்தை மயானத்தில் நேற்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சர் லலித் அத்துலத் முதலி, அமைச்சர் சிறில் மத்தியூ உட்பட பெருந்திரளான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். சுதந்திர கட்சித்தலைவிதிருமதிசிறிமாவோ பண்டாரநாயக்கா அன்னாரின் இல்லத்திற்கு சென்று நேற்று காலை அஞ்சலி செலுத்தினார்கள். (க)

## தமிழினத்திற்கு பேரிழப்பு

(கொழும்பு)

அமரர் எ. எல். தம்பிஐயாவின் மறைவு தமிழினத்திற்கு பேரிழப்பாகும் என்று தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: 1947ம்ஆண்டு தமிழ்காங்கிரஸ் வேட்பாளர் திரு. எ. வி. குலசிங்கத்துடன் சுயேட்சையாக தீவுப்பகுதியில் போட்டியிட்டு அமரர் தம்பிஐயா வெற்றி பெற்றார். பின் தமிழ் இனத்தின் ஒற்றுமைக்காக தமிழ் காங்கிரஸில் சேர்ந்து உழைத்தார், 1952ம் ஆண்டுபொதுத் தேர்தலில் அவர் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். கட்சியின் வளர்ச்சிக்கும். தீவுப்பகுதியின் முன்னேற்றத்திற்கும் அவர் அயராது உழைத்தார். அவரின் மறைவு தமிழினத்திற்கு பேரிழப்பாகும். க

## அரசு வெற்றிபெற..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட்கட்சி பிரதிநிதிகள் இவ்விடயமாக கட்சி தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு அடுத்த கூட்டத்தில் முடிவை அறிவிப்பதாக தெரிவித்தனர்.

இவ்விஷயமாக தமிழர்விடுதலை கூட்டணியினருடன் தொடர்பு கொண்டு முடிவை தெரிவிப்பதாக திரு. ரி. பி. இலங்கரத்தின தெரிவித்தனர்.

இப்பியான நடவடிக்கைகள் மூலமே அரசுக்கு எதிராக உலகத்தின் கவனத்தை திருப்பலாமென்றும் இதுதான் அர்த்தமுள்ள பயனுள்ள நடவடிக்கையாக அமையும் என்றும் அட பிரேரணையில் மேலும் கூறப்பட்டிருந்தது.

சர்வஜன வாக்கெடுப்பில், மக்களுக்கு பிரசாரம் செய்வதற்கான வழிவகைகள் பற்றி தீர்மானிக்க திரு. சேதப்பிரிய சேனநாயக்கா, திரு. குமார் பொன்னம்பலம், ஜனுப் அஸீஸ் திரு. டியூ. பொண்ணடோ ஆகியோரைக் கொண்டகுழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. [இ]

## கூட்டணியின...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (க)

## சிறிமா தலைமை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சமசமாஜக்கட்சி) திரு. என். சண்முகதாசன் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி லங்கா [சமசமாஜகட்சி, ஜனநாயக தேசிய முன்னணி பிரதி நிதிகளும் கலந்திகொண்டனர்.

இக்கூட்டத்தில் அமைப்பு குழு ஒன்றும் பிரசாரகுழு ஒன்றும் அமைக்கப்பட்டது இக்குழுக்களில் ஒவ்வொருகட்சியிலிருந்தும் இரு பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர்.

பொதுத்தேர்தலை பின்போடுவதை எதிர்க்கும் இக்கம் என்ற பெயரில் இயங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணியினருடன் தொடர்புகொள்வதாக திரு. ரி. பி. இலங்கரத்தின தெரிவித்தார். (க)

## வருடாந்தம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிலும் காலத்திலேயேபெறச் செய்யவேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் டாக்டர் சுகந்தன், வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி ப. சண்முகராசா, பண்டத்தரிப்பு கிராமோதய சபைத் தலைவியும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவியுமான திருமதி பேர்ளி அத்தனுசியார் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள், (க)

## ராஜேஸ்வரி முதல்தர அறிவிப்பாளர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி சண்முகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் மொழி அறிவிப்பாளர் தரம் ஒன்றிற்கு உயர்த்தப் பட்டுள்ளார்.

இவர் 1952ம்ஆண்டு, நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், நாடக நடிகையாகவும் பணியினை ஆரம்பித்து வைத்தார்.

1971ம் ஆண்டு தற்காலிக அறிவிப்பாளராக நியமனம் பெற்றார். இதுவரை தயாரிக்கப்பட்ட ஒலிபரப்பாகிய ''ஓடி விளையாடுபாப்பா'', ''பெண் உலகம்'' ஆகிய நிகழ்ச்சிகள் நேயர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற நிகழ்ச்சியாகும்.

1974ம் ஆண்டு, தமிழ் சேவை இரண்டில் நிரந்தர அறிவிப்பாளராக நியமிக்கப் பட்டு சிறந்த சேவையாற்றி வகிறார். [க]


## நன்றி நவிலல்

நவஜீவனக் குடும்பம் - பரந்தன்

நவஜீவனப் பிதா அருள்திரு

### அ. செ. தம்பிராசா

அவர்களின் இழப்பை அறிந்ததும் நேரில் வருகை தந்தும் மலர்வளையம்அனுப்பியும் அனுதாபச்செய்திகள் அனுப்பியும் வேறு பல உதவிகள் நல்கியும் எமது துக்கத்திலகலந்து கொண்ட அனைவருக்கும்எமது உளங்கனிந்த நன்றிகள் உங்கள் அன்பு எம்முடன் தொடர்ந்தும் நீடிக்க இறை ஆசி வேண்டி நிற்கிறோம். 5061


# தமிழ் மொழிமூலம் முகாமைத்துவ பயிற்சிநெறி:
# யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யமுடியாதநிலை
## வர்த்தக மாணவர்சங்கத்தலைவர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி மூலம்முகாமைத்துவ பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வர்த்தக மாணவர் சங்கத் தலைவர் திரு. இ. செல்வநாயகம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

1981/82ம் கல்வியாண்டில் முகாமைத்துவ பயிற்சி நெறியை தமிழ்மொழிமூலம் பயில்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப் பட்டனர்.

அங்கு திட்டமிட்ட முறையில் மேற்கொண்ட இனவாத நடவடிக்கையின் விளைவாக இவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு. மானியக்குழுவின் தற்காலிக நடவடிக்கையாக இம்மாணவர்களுக்கு மானிய ஆணைக்குழுவின் கட்டிடத்தில் விரிவுரைகள் நடாத்தப்பட்டு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் 1ம் ஆண்டுப்பரீட்சை நடத்தப்பட்டது.

இத்தகைய நடவடிக்கையின் விளைவாக இவர்கள் பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்குரிய அந்தஸ்து, வசதிகள் அனைத்தையும் இழந்தனர். இத்தகைய அநீதியான செயலின் விளைவினை எதிர்த்து பல்கலைக்கழக மானிய குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

அதன் நிரந்தர நிர்வாகம் இவர்களை முகாமைத்துவபீடம் ஒன்றின கீழ், முகாமைத்துவ கல்வியை பெறுவதற்கும், விஞ்ஞானமானி வியாபாரநிர்வாக பட்டத்தை பெற வழிசெய்யும் முகமாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்தனர்.

ஆனால் யாழ்ப்பாண பல்கலைக் கழக நிர்வாகம் இது சம்பந்தமாக தடவடிக்கையை மேற்கொள்ளாததால், இவர்கள் இங்கும் பட்டதாரி மாணவர்களாக பதிவு செய்ய முடி துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர். (க)

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தை தொடர்ந்து ரயில் பெட்டியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. காயமடைந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## உயிரை---

[1- ம் பக்கத்தொடர்ச்சி]

நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார் அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி தலைமையில் கல்லூரியின் 'குமாரசாமி' மண்டபத்தில் இப்பரிசளிப்புவிழா நடைபெற்றது,

பேராசிரியர் கனகசுந்தரம் மேலும் தமது உரையில் கூறியதாவது ''உயிரை மேன்மையடையச் செய்யும் கல்வி பெறுவது சிரமமானதாகும். ஆனால் இறைவழிபாட்டின் அடிப்படையின் இக்கல்வியை இலகுவாகப்பெறலாம்.

''எமது தற்கால மாணவரிடையே ஒழுக்கம், பண்பு. அஹிம்சை என்பன அருகிவருகின்றன. அன்பினால் சகல ஜீவராசிகளையும் கவரலாம் என்று மகான்கள் போதித்தார்கள். காந்தியடிகள் சத்தியத்தின் வலிமையினால் பெற்ற மேன்மை எமக்கு பெரும வாழ்க்கைமுறையைஉணர்த்துகின்றது.

ஆனால் இன்று இவை பற்றிக் குறிப்பிடுபோதெல்லாம அவை பழங்காலக்கதை என்று கூறிக்கொள்ளும் வழக்கம் நம்மிடையே காணப்படுகின்றது. அசுரகுணம் படைத்தவர்களை அழித்தமையால் இராமபிரானுக்குக் கூட தோஷங்கள் ஏற்பட்டவைவென்றும் இவற்றை நீக்க இராமேஸ்வரதீர்த்தத்தில் அவர் நீராடினார் என்றும இராமயணம் கூறுகின்றது.

நமது மாணவரிடையே ஆத்மீகம் பற்றிப் போதிக்கும் போது தியானத்துக்கும் முதலிடம் வழங்கவேண்டும்.

இதன் மூலம் தூயசிந்தனையுடன் மனத்தை அடக்கும் பண்பினை உருவாக்கலாம். சிலர் பெரியவர்களுக்கு மட்டுமே தியானங்கள் உரியவை எனலாம். ஆனால் இதற்கு வயது ஒரு தடையாக மாட்டாது'' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி பாடசாலை அறிக்கையினை வாசித்தார். திருமதி கனகசுந்தரம் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

இதனையடுத்து மாணவரின் தாளவாத்தியக்கச்சேரியும் 'யூலியசீசர்' ஆங்கில நாடகமும் நடைபெற்றன இந்தநாடகம் யாழ். மாவட்டபாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட நாடகப்போட்டியில் முதலிடம் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

# யாழ். தபால் திணைக்களத்தில் 'ஓவர்டைம்' செய்தபோது உயிர் பிரிந்தது!

[யாழ்ப்பாணம்]

ஓய்வு நாளான நேற்று 'ஓவர் டைம்' வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் அமைதியாக இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்ட சம்பவமொன்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியிலுள்ள தபால் திணைக்கள கணக்குப்பகுதியில் நடந்துள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த எஸ். சிவரத்தினம் என்பவரே இவ்விதம் மரணமானார். எழுதுவினைஞராகப் பணியாற்றும் இவர் நேற்றுக்காலை அலுவலகத்தைத் திறந்து, வேலையைச் செய்ததாகவும், குளியலறைக்குச் சென்றபோது இவர் மரணமானதாகவும் மரண விசாரணையின் போது தெரியவந்தது.

யாழ், மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ் பிரான்ஸிஸ் மரண விசாரணை நடாத்தினார்.

இறந்தவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தவரென்றும் மரணவிசாரணையின் தெரியவந்தது.

இயற்கை மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்

தபால் திணைக்கள கணக்குப் பகுதி சடலத்தைத் தமது செலவில் வீட்டாரிடம் ஒப்படைத்தது.

# சங்கானையில் ஒரேஇரவில் 3 கடைகளில் திருட்டு!

(சங்கானை)

சங்கானையில் ஒரே இரவில் மூன்று கடைகளில் திருட்டு நடந்துதுள்ளது.

சங்கானைச் சந்தைக்குள் இருக்கும், பல சரக்குக்கடை, இரும்புக்கடை, தேனீர்க்கடை ஆகியவற்றில் திருட்டு நடந்துள்ளது.

இம்மூன்றுகடைகளிலிருந்து பணம் றேடியோ, கசெற்றெக்கொடர் சிகரட் சோடாப் போத்தல்கள் உணவு முத்திரை ஆகியவையே திருடப்பட்டுள்ளன.

இத் திருட்டு சம்பந்தமாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## மரம்நாட்டு விழா

(மன்னார்)

மன்னார்- உயிர்த்த ராசன் குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் உலக உணவு தினத்தை முன்னிட்டு மரம் நாட்டு விழா நடைபெற்வது.

பாடசாலை அதிபர் திரு. அந்தோணிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழவிற்கான ஏற்பாடுகளை பாடசாலை துணை அதிபரும், விவசாய ஆசிரயருமான திரு. அ. மனோகரின் இம்மானுவேல்வாஸ மேற்கொண்டிருந்தார்.


## ஹோம் பினுன்ஸ்லிமிட்

கீழ்க்கண்ட பொருட்களை விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- பாவனையிலிருந்து விலக்கப்பட்ட பஸ் டயர்கள்—16
- 5லிட்டர்அளவுடைய வெற்று எண்ணை டப்பாக்கள்—49

கேள்விப்பத்திரங்கள், சீல் பண்ணப்பட்ட கவரில் எமது விலாசத்திற்கு 82-11-10ம்திகதி காலை 10 மணிக்கு முன்பு கிடைக்க வேண்டும்

முகாமையாளர்
ஹோம் பினுன்ஸ் லிமிட்,
82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 24310


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone; 22389 — 24126.